கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No.5/2023

நாள்.10.09.2025 ம.சா.1 திருமதி.ஜெயலெட்சுமி

த/பெ திரு.கதிரவன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Com படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கின்றேன் என்றால் நான் தொழில் நடத்தி வருகிறேன். நான் செய்யும் தொழிலுக்கு உரிமம் வாங்கியுள்ளேனா என்றால் நான் பெட்ரோல் பங்க் வைத்துள்ளேன் அதற்கு உரிமம் பெற்றுள்ளேன். நான் இவ்வழக்கில் பெட்ரோல் பங்கிற்கான உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) பெட்ரோல் பங்க் தவிர்த்து வேறு தொழில் ஏதும் நடத்தி வருகிறேனா என்றால் Finance மற்றும் Pawn Shop எனது கணவரின் பெயரில் உள்ளது, ஆனால் நான் நடத்தி வருகிறேன். மேற்படி Finance மற்றும் Pawn Shop க்கு தனித்தனியாக உரிமம் பெற்றுள்ளீர்களா என்றால் சரிதான், தனித்தனியாக உரிமம் பெற்றுள்ளேன். மேற்படி உரிமங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நான் சுயமாக பெட்ரோல் பங்க் மட்டும் தொழிலாக நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.5 இலட்சம் ஆகும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால்



MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:02:20 +0530

செலுத்துகிறேன். என்னுடைய பெயரில் பான் கார்ட் உள்ளதா என்றால் எனது பெயரில் உள்ளது, பெட்ரோல் பங்க்கு தனியாக பான் கார்ட் உள்ளதா என்றால் எனது பான் கார்ட்டுடன் இனைக்கப்பட்டுள்ளது. Finance மற்றும் Pawn Shop க்கு தனியாக பான் கார்ட் உள்ளதா என்றால் எனது கணவரின் பான் கார்ட் Finance மற்றும் Pawn Shop க்கு இனைக்கப்பட்டுள்ளது. அனைத்து தொழில்களுக்கும் சேர்த்து நான் மற்றும் எனது கணவர் இரண்டு Annual Returns மட்டும் சமர்ப்பிக்கிறோம் என்றால் சரிதான்.

4) நானும் எனது கணவரும் நடத்தி வரும் தொழில்களில் வேறு பங்குதாரர்கள் யாரும் கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 2022ம் வருடம் உள்ள Annual Returns ஐ இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 2022ம் வருடம் உள்ள Annual Returns ல் எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தை செலவு கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பிக்கவில்லை. அவ்வாறு காண்பிக்காமல் இருப்பதற்கு சிறப்பு காரணங்கள் ஏதும் உண்டா என்றால் அவ்வாறு ஏதும் இல்லை.

5) ஒரு வருட Annual Returns ல் வரவு மற்றும் செலவு விவரங்களை கண்டிப்பாக தெரிவிக்கவேண்டும் என்ற விதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் Annual Returns ல் செலவு விவரத்தில் ரூ.10 இலட்சம் கடன் கொடுத்த விவரத்தை கூறாததால் அது சட்டப்படியான கடனுக்குள் அடங்காது என்றால் சரியல்ல. ரூ.20 ஆயிரத்துக்கு மேல் எந்த நபரும் பரிவர்த்தனை செய்யும் போது அதனை ரொக்கமாக கொடுக்காமல் வரையோலை, காசோலை மற்றும் இணையவழி



MITHUNA A KAISER Digitally signed by MITHUNA A KAISER Date: 2025.09.10 18:03:12 +0530

பரிவர்த்தனை ஆகியவை மூலம் தான் செய்யமுடியும் என்ற விதி தெரியுமா என்றால் தெரியும்.

6) எதிரிக்கு அளித்ததாக சொல்லப்படும் கடன் தொகையானது ஆவணங்கள் வழியாக அளிக்காததால் அது சட்டப்படியான கடனுக்குள் அடங்காது என்று சொன்னால் சரியல்ல. நான் பெட்ரோல் பங்க் வைத்து நடத்திவரும் பணகுடியில் எதிரியும் பெட்ரோல் பங்க் வைத்துள்ளார் என்றால் சரிதான். எதிரிதான் முதன் முதலாக பெட்ரோல் பங்க் தொழிலை ஆரம்பித்தார். எதிரி பெட்ரோல் பங்க் ஆரம்பித்து எவ்வளவு வருடங்கள் கழித்து நான் பெட்ரோல் பங்க் தொடங்கினேன் என்றால் தெரியாது, நான் 2020 ஆரம்பித்தேன். மேற்படி தொழில் தொடங்குவதற்கு முன்பே அல்லது பின்போ எனக்கு வேறு தொழில்கள் கிடையாது என்றால் சரிதான்.

7) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.10 இலட்சம் மேற்படி தொழிலில் வந்த வருமானத்தில் கொடுக்கப்பட்டது என்றால்(சாட்சி அமைதியாக இருந்தார்) தொழிலில் கிடைத்த வருமானம் மற்றும் எனது கணவர் அனுப்பி வைத்த தொகையின் மூலமாகவும் கடன் அளித்தேன். மேற்படி ரூ.10 இலட்ச தொகையில் எவ்வளவு ரூபாய் எனது கணவர் அனுப்பி வைத்தது என்றும், எவ்வளவு ரூபாய் எனது தொழிலில் கிடைத்த லாபம் என்றும் பிரித்து கூறமுடியுமா என்றால் எனக்கு அவ்வளவு தெரியாது.

8) என் கணவர் அனுப்பி வைத்ததாக கூறும் பணம் ஆனது எனக்கு நேரடியாக வங்கி கணக்கில் அனுப்பி வைக்கவில்லை. என் கணவர் வங்கி



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:17 +0530

கணக்கில் வரையப்பட்ட காசோலை மூலமாக தொகையை பெற்று கொள்வேன். அவ்வாறு எனது கணவர் வங்கி கணக்கில் காசோலை மூலமாக பணம் எடுத்ததை நிரூபிக்க எனது வங்கி கணக்கு பரிவர்த்தனையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

9) எனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எனது கணவர் ஏற்கனவே கையொப்பமிட்டு சென்ற காசோலையை பயன்படுத்தி நான் பணம் எடுத்து கொள்வேன் என்றால் சரிதான். எனது கணவர் அளித்த பணத்தையும் சேர்த்துதான் எதிரிக்கு கடன் அளித்தேன் என்பதை நிரூபிக்க எனது கணவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கணவர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் செலுத்துகிறார்.

10) 2022ம் வருடம் என்னுடைய Taxable Income எவ்வளவு என்பதையும், அதற்கு நான் செலுத்திய வரி எவ்வளவு என்பதையும் காட்டுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். 2022ம் வருடம் தவிர்த்து வேறு வருடங்களில் எவ்வளவு வரி செலுத்துகிறேன் என்றால் 2025ம் வருடம் சுமார் ரூ.80 ஆயிரம் வரியாக செலுத்தியுள்ளேன்.

11) நானும், எதிரியும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் அமைந்த சிவன் கோவில் எங்கள் சமுதயாத்திற்கான திருவிழாவில் சமுதாய தலைவராக எதிரி தான் வெகு வருடங்களாக



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:22 +0530

செயல்பட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது எனது கணவர் தான் சமுதாய தலைவராக செயல்பட்டு வருகிறார் என்றால் இல்லை, அவர் வேண்டாம் என்று தன்னிட்சையாக விலகி விட்டார். எனக்கு எதிரியை எப்படி தெரியும் என்றால் எனது கணவர் மூலம் தெரியும். எதிரியை எனது கணவர் மூலம் தெரியும் என்ற விவரத்தை புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பிலோ மற்றும் நிரூபண வாக்குமூலத்திலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

12) நான் கடன் கொடுத்தாக சொல்லப்படும் காலத்தில் எனது கணவர் ஊரில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் கடன் கொடுக்கும் முன்பாக கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு கடன் கொடுக்க சொன்னவர் எனது கணவர் என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்திலும் எதிரி காசோலை அளித்ததாக சொல்லும் சமயத்திலும் எனது கணவர் உடன் இருந்தாரா என்றால் உடன் இருந்தார் என்று நினைக்கிறேன். எதிரிக்கு கடன் கொடுக்க சொல்லி எனது கணவர் எப்போது கூறினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை, 2022ம் வருடம் ஜீன் மாதம் கூறினார். எனது கணவர் என்னிடம் எதிரிக்கு கடன் அளிக்க சொன்ன சமயம் அவர் வெளிநாட்டில் இருந்தாரா அல்லது ஊரில் இருந்தாரா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

13) எதிரி ஜீன் மாதம் 2022ம் வருடம் எனது வீட்டிற்கு வந்து கடன் கேட்டாரா என்றால் ஆமாம். அந்த சமயத்தில் வீட்டில் உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது குழந்தைகள் இருந்தனர். ஜீன் மாதம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:26 +0530

2022ம் வருடம் எனது வீட்டிற்கு வந்து கடன் கேட்டபோதும் தாமதமாக 02.07.2022ல் கடன் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது, தாமதமாக கடன் கொடுத்ததற்கு வேறு காரணங்கள் உள்ளதா என்றால் எதிரி ஏற்கனவே எனது கணவரிடம் ரூ.14 இலட்சம் கடன் வாங்கியுள்ளார் அதனால் அது பற்றி ஆலோசித்து விட்டு பின்னர் தாமதமாக கொடுத்தோம்.

14) எதிரி எனது கணவரிடம் 30.05.2022 அன்று ரூ.14 இலட்சம் கடன் வாங்கி இருந்தார். மேற்படி 30.05.2022 அன்று எதிரி வாங்கிய ரூ.14 இலட்சம் கடனுக்காக அளிக்கப்பட்டதாக கூறப்படும் 3 காசோலைகளில் எந்த தேதி நிரப்பபட்டிருந்தது என்றால் 30.07.2022 ஆகும். மேற்படி 3 காசோலைகளையும் எதிரி கடன் பெற்ற தினமே 30.05.2022 எனது கணவரிடம் கொடுத்துவிட்டார். எனது கணவர் கடன் அளித்ததாக கூறப்படும் 30.05.2022ம் தேதியில் இருந்து தோராயமாக 25 நாட்களுக்கு உள்ளாகவே என்னிடம் கடன் கேட்டார் என்றால் எனது கணவரிடம் கடன் கேட்டார்.

15) ஜீன் மாதத்தில் எதிரி எனது கணவரிடம் கடன் கேட்டது போனிலா அல்லது நேரிலா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகையை எனது வங்கி கணக்கிலிருந்து எடுத்து ரொக்கமாக அளித்தேனா அல்லது கையிருப்பு தொகையா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, என் கையில் எப்போதும் தொகை இருக்கும். எதிரி ஏற்கனவே ரூ.14 இலட்சம் என் கணவரிடம் கடன் பெற்றதாக கூறும் நிலையில் திரும்பவும் எதிரிக்கு ரூ.10 இலட்சம் நான் கடன் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல, ரூ.14



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:30 +0530

இலட்சமும் மற்றும் ரூ.10 இலட்சத்தையும் சேர்த்து திருப்பி தந்து விடுவதாக கூறினார்.

16) எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.10 இலட்சம் வட்டிக்காக கொடுத்தேனா அல்லது கைமாற்றாக கொடுத்தேனா என்றால் வட்டிக்காக கொடுக்கவில்லை, கைமாற்றாகதான் கொடுத்தேன். எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் எந்த கடனுக்கு நான் வட்டி வாங்கவில்லை என்றால் சரிதான்.

17) எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி 2022 வருடம் ஜீன் மாதம் கடன் கேட்டார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி 1 மாத காலத்திற்குள் கடனை திருப்பி தந்துவிடுவதாக கூறினார் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்திற்கு முன்பு எதிரிக்கும், எங்களுக்கும் வேறு பரிவர்த்தனைகள் ஏதும் உள்ளதா என்றால் என் கணவருக்கும், எதிரிக்கும் இடையே பரிவர்த்தனைகள் உண்டு.

18) எதிரி காசோலை அளித்ததாக கூறப்படும் சமயத்தில் காசோலை தவிர்த்து வேறு ஆவணங்களாக அடமான பத்திரம், Pronote, அசல் ஆவணங்கள் உள்ளிட்டவைகளை கோரினேனா என்றால் இல்லை. ரூ.10 இலட்சம் கடன் கொடுத்ததாக கூறும் நபர் காசோலை போக பிற ஆவணங்கள் ஏதும் காப்புறுதிக்காக கேட்பார் என்றும், நீங்கள் அவ்வாறு



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:36 +0530

கேட்கவில்லை என்பதால் உண்மையிலேயே எதிரிக்கு கடன் ஏதும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனது கணவர் ஏற்கனவே எதிரிக்கு கடன் கொடுத்துள்ளார், எதிரி அதனை திருப்பியும் செலுத்தி உள்ளார் அந்த நம்பிக்கையில் அடிப்படையில் நான் கடன் கொடுத்தேன்.

19) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ல் காசோலையில் பெயர் மற்றும் தேதி நீல நிற மையால் எழுதப்பட்டுள்ளது தொகை எண்ணாலும், எழுத்தாலும் மற்றும் கையொப்பமும் கருப்பு நிற மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், தொகையானது எதிரி காசோலை கொண்டு வரும்போது நிரப்பி கொண்டு வந்தார், பின்னர் பெயர் மற்றும் தேதி என் முன்னர் வைத்து நிரப்பினார். காசோலை நிரப்பப்பட்ட அனைத்தும் எதிரியின் கையெழுத்து தான் என்றால் சரிதான். கருப்பு நிற மையால் எழுதப்பட்ட விவரம் மற்றும் நீல நிற மையால் நிரப்பப்பட்ட உள்ள விவரம் கையெழுத்து வேறுபாடு உள்ளது என்றால் கருப்பு நிற மையால் எழுதப்பட்ட விவரம் எதிரியின் அலுவலகத்தில் வேலை செய்யும் நபரின் கையெழுத்து, நீலநிற மையால் நிரப்பப்பட்ட விவரம் எதிரியின் கையெழுத்து ஆகும்.

20) காசோலையில் கருப்பு நிற மையால் எதிரியின் அலுவலகத்தில் நபரால் நிரப்பபட்ட விவரம் எவ்வாறு தெரியும் என்றால் எதிரி கூறிதான் தெரியும். ம.சா.ஆ.1 காசோலையில் எழுதப்பட்டுள்ள தேதி 30.07.2022 ஆகும். மேற்படி காசோலையை 30.7.2022 அன்று வங்கியில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு வங்கியில் தாக்கல் செய்யாததற்கு சிறப்பு காரணம் ஏதேனும் உண்டு என்றால் எதிரியிடம் தெரியபடுத்தி விட்டு வங்கியில் செலுத்தலாம் என்று உடனே தாக்கல்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:43 +0530

செய்யவில்லை. நான் அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ மற்றும் நிரூபண வாக்குமூலத்திலோ காலதாமதமாக வங்கியில் தாக்கல் செய்ததற்கான காரணத்தை கூறவில்லை என்றால் சரிதான்.

21) எனது கணவரின் காசோலையை எப்போது வங்கியில் செலுத்தினேன் என்றால் அனைத்து காசோலைகளும் 01.09.2022 அன்று வங்கியில் செலுத்தினேன், அன்று தான் எதிரி பணம் இருப்பதாக கூறினார். நான் வங்கியில் காசோலையை செலுத்துவதற்கு முன்பு எதிரியை நேரில் சந்தித்தேனா என்றால் நேரில் சந்திக்கவில்லை எனது கணவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார். இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளோம், ஆனால் இவ்வழக்கிற்கு தொடர்புடையதா என்று ஞாபகம் இல்லை.

22) காசோலையில் கூறப்பட்ட தேதியில் இருந்து வங்கியில் தாக்கல் செய்த தேதி வரை எத்தனைமுறை எதிரியிடம் பணத்தை கேட்டு இருப்போம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எனக்கு எதிரி அளித்ததாக கூறப்படும் காசோலை ஒரே ஒரு காசோலை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் இறுதி வரியில் 'you had issued the above said three cheques' என்று கூறி வழக்கறிஞர் அறிவிப்பானது அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி கொடுத்தாக சொல்லப்படும் காசோலை TMB வங்கியில் வரையப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் TMB வங்கியிலும், IOB வங்கியிலும் வரையப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், எனது



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:03:54 +0530

கணவர் பெயரில் உள்ள காசோலை விவரங்கள் தவறுதலாக வழக்கறிஞர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

23) நான் அனுப்பிய ம.சா.ஆ.3 கேட்பு அறிவிப்பானது மனதை செலுத்தாமல் இயந்திர கதியில் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரிக்கு கடன் கொடுக்காததால் தான் கேட்பு அறிவிப்பில் இவ்வாறான தவறுகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் சேர்த்து மொத்தமாக எத்தனை காசோலைகள் எதிரி எங்களுக்கு கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் மொத்தம் 4 காசோலைகள் ஆகும்.

24) எனது கணவருக்காக பவர் ஏஜென்ட் என்ற முறையில் தாக்கல் செய்த வழக்கில் உள்ள காசோலைகளில் உள்ள Payee பெயரானது யாரால் எழுதப்பட்டது என்றால் எதிரியால் எழுதப்பட்டது. எனது கணவருக்கு வழங்கியதாக கூறப்படும் காசோலைகளில் ஒவ்வொரு விவரம் ஒவ்வொரு கையெழுத்து உள்ளது என்று சொன்னால் சரியல்ல, எதிரி வரும்போதே கையெழுத்தும், தொகையினையும் நிரப்பி கொண்டு வருவார் பெயர் மற்றும் தேதியினை என் வீட்டில் வைத்துதான் நிரப்புவார்.

25) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை மற்றும் ம.சா.ஆ.5 ஒப்புகை அட்டையில் உள்ள எதிரியின் கையொப்பங்களுக்கு இடையை வித்தியாசம் உள்ளதா என்றால் வித்தியாசம் உள்ளது, காசோலையில் உள்ள கையெழுத்து அவர் நிரப்பி கொண்டு வருவார், ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்தை நான் பார்க்கவில்லை. எதிரிக்கு



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:04:02 +0530

திருநெல்வேலி தியாகராஜ நகரில் சொந்தமாக வீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி வீடானது என்னிடம் அடமானம் செய்யப்பட்டது. மேற்படி வீட்டின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அது பற்றிய விவரம் தெரியாது. மேற்படி வீட்டின் அடமான தொகை எவ்வளவு என்றால் ரூ.1 1/4 கோடி ஆகும். மேற்படி வீட்டு அடமானம் ஆனது எதிரி பத்திர பதிவு அலுவலகம் மூலம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான்.

26) மேற்படி அடமானம் சம்மந்தமாக எனக்கு எந்த விவரம் நேரடியாக தெரியாது. மேற்படி அடமான தொகை திருப்பி அளிக்கப்பட்ட விவரமும் எனது கணவருக்குதான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி அடமானம் செல்லடித்த விவரம் தெரியும் ஆனால் தொகை திரும்ப பெற்ற விவரம் தெரியாது, எனது கணவர் வங்கி கணக்கில் ரூ.90 இலட்சம் வந்ததாக என் கணவர் கூறினார். எனது கணவருக்காக நான் பவர் ஏஜென்ட் என்ற நிலையில் வேறு வழக்கின் சங்கதிகள் யாவும் தெரியும் என்று கூறிதான் நான் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அடமானம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று கூறிவிட்டு எனது கணவருக்காக பவர் ஏஜென்ட் நிலைமையில் அவருக்கு வழங்கப்பட்டதாக கூறும் காசோலை பற்றிய சங்கதிகள் யாவும் தெரியும் என பொய்யாக கூறி வழக்கு நடத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

27) என் பெயருக்கு அடமானம் ஏற்பட்ட தேதி என்னவென்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி அடமானம் ஏற்பட்டதாக சொல்லப்படும் காலக்கட்டமும், காசோலை வழங்கப்ப்பட்ட காலக்கட்டமும் ஒரே காலக்கட்டம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், எனது



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:04:07 +0530

கணவரும் எதிரி மீது புகார் கொடுத்துள்ளோமா என்றால் புகார் கொடுத்துள்ளோம். காவல் நிலையத்தில் என்ன பேசி புகாரை முடித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை, நானும் உடன் சென்று இருந்தேன். எதிரி மாண்புமிகு மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தாரா என்றால் ஞாபகம் இல்லை.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.09.10 18:04:13 +0530